# Tnpsc Model Question Paper 31 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. கரோலாலஸ் லின்னேயஸ் முன்மொழிந்த வகைப்பாட்டு முறை எது?
(அ) இயற்கை முறை (ஆ) இனப்பரிணாம வழி முறை
(இ) அண்மைக்கால முறை **(ஈ) செயற்கை முறை**

2. ப்ரோகேரியாட்டிக் செல் குறித்து தவறான கூற்றினை கண்டுபிடிக்கவும்
(அ) சவ்வினால் சூழப்பட்ட மரபணுப் பொருள் கிடையாது
(ஆ) 70S வகை தைபோசோம்கள் காணப்படுகிறது
(இ) மீசோசோம்கள் காணப்படுகிறது
**(ஈ) சவ்வினால் சூழப்பட்ட செல் உறுப்புகளான பசுங்கணிகம், மற்றும் மைட்டோகாண்டிரிய காணப்படுகிறது**

3. கீழ்க்காண்பனவற்றில் எது ஹெப்டா ஹைடிரேட் அல்ல?
1. பச்சை விட்டிரியால்
2. வெள்ளை விட்டிரியால்
3. நீல விட்டிரியால்
4. சிவப்பு விட்டிரியால்
(அ) 1 மற்றும் 2 மட்டும் **(ஆ) 3 மட்டும்** (இ) 4 மட்டும் (ஈ) 3 மற்றும் 4 மட்டும்

4. நரம்பு நஞ்சாகச் செயல்படும் பூச்சி கொல்லி ---------- ஆகும்.
(அ) எண்ட்ரின் (ஆ) எத்திலீன் டை குளோரைடு
**(இ) மாலதியான்** (ஈ) ஈய ஆர்சினைட்

5. உருளைப்புழு உடல் சுவரில், வெளியில் இருந்து உள் பக்கமாக உள்ள அடுக்குகளின் சரியான வரிசை
**(அ) க்யூட்டிகல், மேல்தோல், நீளமான தசைகள்**
(ஆ) க்யூட்டிகல், மேல்தோல், நீளமான தசைகள் மற்றும் வட்ட தசைகள்
(இ) மேல்தோல், நீளமான மற்றும் வட்ட தசைகள், க்யூட்டிகல்
(ஈ) மேல்தோல், க்யூட்டிகல், நீளமான தசைகள்

6. கீழ்க்கண்டவற்றுள் எந்தக் கூற்று லாம்ப்ரேக்கு பொருத்தமாக அமையும்?
1. கடலில் வாழ்கிறது மற்றும் முட்டையிடுவதற்காக நதிக்கு வலசை செல்கிறது
2. அக ஒட்டுண்ணிகள்
3. தாடையற்ற விலங்கு
(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 2 மட்டும் **(இ) 1 மற்றும் 3 மட்டும்** (ஈ) 3 மட்டும்

7. பின்வரும் பத்தியை படித்து, அதற்கான கேள்விக்கு பதிலளிக்கவும்.
உயிரினங்கள் தனித்தனி புவியியல் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளன. அவற்றின் புவியியல் பிரிவின் காரணமாக அவை இனக்கலப்பு செய்ய முடியாது. ஆனால் அவற்றுக்கிடையேயான புவியியல் தடை நீக்கப்பட்டால் அவ்வாறு நடக்குமென்று எதிர்பார்க்கப்படும். பிரிக்கப்பட்ட உயிரினங்கள் சுயாதீனமாக உருவாகிறது மற்றும் அந்தந்த சூழலுக்கு ஏற்றது, தனித்தனியான பரிணாமப் பாதைகளின் விளைவாக அவற்றுக்கிடையே இனப்பொருக்கத் தடைகளை உருவாக்குகிறது.
இந்த பத்தி எதை வலியுறுத்துகிறது
**(அ) வேற்றிட உயிரினத் தோற்றம்** (ஆ) குற்றினத் தோற்றம்

(இ) ஓரிட உயிரினத் தோற்றம் (ஈ) இணை வாழிடச் சிறப்பினைத் தோற்றம்

8. பெண் இனப்பெருக்க சுழற்சியின் வரிசையில் ஹார்மோன்களை வரிசைப்படுத்தவும்.
1. லூடினைசிங் ஹார்மோன்
2. புரோஜெஸ்ட்டிரோன்
3. ப்ரோலாக்டின்
4. கருமுட்டை தூண்டும் ஹார்மோன்
(அ) 2, 4, 1, 3 (ஆ) 4, 1, 2, 3 (இ) 3, 4, 1, 2 **(ஈ) 1, 4, 2, 3**

9. தமிழக விவேகானந்தா கேந்திராவின் புதிய முறை உயிரி வாயுவினை உற்பத்தி செய்யும் மாதிரி சாதனமானது -------- என்று அழைக்கப்படுகிறது.
**(அ) சக்தி சுரபி** (ஆ) சக்தி தமிழ்நாடு
(இ) சக்தி இந்தியா (ஈ) கழிவில் இருந்து ஆற்றல்

10. வளநாடு வனவிலங்கு சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?
(அ) கோயம்புத்தூர் **(ஆ) தூத்துக்குடி** (இ) ஈரோடு (ஈ) ஊட்டி

11. கீழ்க்காண்பவற்றுள் எவை தவறாக இணைந்துள்ளன?
1. ககன்யான் திட்டம் – DFRS
2. சந்திராயான்2 – CES
3. தகவல் தொடர்பு செயற்கைகோள் – GSAT-24
4. சிறிய செயற்கைகோள் ஏவு வாகனம் – SSLV-D1/EOS-02
**(அ) 1 மற்றும் 2** (ஆ) 2 மற்றும் 4 (இ) 3 மற்றும் 4 (ஈ) 2 மற்றும் 3

12. பின்வருவனவற்றுள் எவை 2001-ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு கொள்கையில் இடம்பெற்ற கூற்றுகள்?
1. உள்கட்டமைப்பை முன்னேற்றுதல் மற்றும் மேம்படுத்துதல்
2. ஊக்கத்தொகைள் மூலம் விளையாட்டுகளை முன்னேற்றுவது
3. பெண்கள், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் பங்கேற்பினை மேம்படுத்துதல்
4. அதிக அளவில் விளையாட்டுப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல்
(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 1, 2 மற்றும் 4 மட்டும்
(இ) 1 மற்றும் 4 மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3 மட்டும்**

13. இன்சுலினை முதன் முதலாக கண்டறிந்தவர்கள்
(அ) அலெக்ஸ் மற்றும் நிகோலஸ் (ஆ) மேயர் மற்றும் வில்சன்
**(இ) பேண்டிங் மற்றும் பெஸ்ட்** (ஈ) ராபர்ட் மற்றும் ஜேக்கப்

14. தவறாக பொருந்தப்பட்ட இணையை அடையாளம் காண்க:
1. போடோலாந்த் மக்கள் இயக்கம்–ஜார்கண்ட்
2. மலை மாநில மக்கள் ஜனநாயகக் கட்சி–அஸ்ஸாம்
3. லோக் ஜனசக்தி கட்சி–பீகார்
4. ராஷ்ரிய லோக்தந்த்ரிக் கட்சி–ராஜஸ்தான்
(அ) 1 மற்றும் 3 (ஆ) 2 மற்றும் 4 **(இ) 1 மற்றும் 2** (ஈ) 3 மற்றும் 4

15. அரசியல் கட்சிகளை அவைகள் உருவாக்கப்பட்ட வருடங்களுடன் பொருத்தவும்
அ. இந்திய தேசிய காங்கிரஸ் 1. 2013

ஆ. அகில இந்தியா திரிணமூல் காங்கிரஸ் 2. 1925
இ. தேசிய மக்கள் கட்சி 3. 1885
ஈ. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) 4. 1998

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 3 | 4 | 1 |
| **ஆ.** | **3** | **4** | **1** | **2** |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| ஈ. | 1 | 4 | 3 | 2 |

16. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்க:

| நதிகள் | நீளம் (கிமீ) |
|---|---|
| அ. கோதாவரி | 1. 1565 |
| ஆ. கிருஷ்ணா | 2. 1400 |
| இ. நர்மதை | 3. 1310 |
| ஈ. மகாநதி | 4. 1205 |

(அ) 1 மற்றும் 3 சரி (ஆ) 1 மற்றும் 2 சரி **(இ) 2 மற்றும் 3 சரி** (ஈ) 3 மற்றும் 4 சரி

17. பின்வருபவைகளில் எது இமயமலையின் அதிக உயரமுள்ள பகுதிகளையும் குறைந்த உயரமுள்ள பகுதிகளையும் பிரிக்கிறது?
(அ) கரோல் நீர்வடிகால் **(ஆ) மத்தியப்பெரும் உந்தம்**
(இ) டூன் பள்ளத்தாக்கு (ஈ) காட்மாண்டு பள்ளத்தாக்கு

18. கீழ்கண்ட இந்திய மாநிலங்களில் வெள்ளி உற்பத்தியில் முதல் இடம் பிடிக்கும் மாநிலம் எது?
**(அ) ஆந்திரப்பிரதேசம்** (ஆ) தமிழ்நாடு (இ) கேரளா (ஈ) பீஹார்

19. இந்தியாவின் அறிமுக செயற்கை கோள் எது?
(அ) பாஸ்கரா **(ஆ) ஆர்யபட்டா** (ஈ) பி.எஸ்.எல்.வி (ஈ) இன்சாட்

20. பின்வரும் வாக்கிங்களை கவனமாகக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் "குறைந்த மக்கள் தொகை" குறித்து சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு
வாக்கியம் 1: ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களும் மக்கள் தொகையும் சரியான விகிதத்தில் காணப்படுவது.
வாக்கியம் 2: ஒரு குறிப்பிட்ட இடத்தில், காணப்படும் வளங்களைவிட மக்கட்தொகை மிகுதியாக காணப்படுவது.
வாக்கியம் 3: ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களைவிட மக்கட்தொகை குறைந்து காணப்படுதல்
(அ) வாக்கியங்கள் 1, 2 மற்றும் 3 சரி
(ஆ) வாக்கியம் 1 சரி 2 மற்றும் 3 தவறு
(இ) வாக்கியம் 2 சரி 1 மற்றும் 3 தவறு
**(ஈ) வாக்கியம் 3 சரி 1 மற்றும் 2 தவறு**

21. எந்த சுல்தானியர் ஆட்சியில் மிக அதிகமான நிலப்பரப்பு அரசாட்சியின் எல்லையாக இருந்தது?
(அ) அலாவுதின் கில்ஜி (ஆ) முபாரக் ஷா கில்ஜி
**(இ) முகம்மது–பின்–துக்ளக்** (ஈ) கியாசுதீன் துக்ளக்

22. ஹரப்பன் மக்களைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மை?

winmeen.com

1. ஹரப்பன்கள் ஃபாலஸ்–ஐ வழிபடுபவர்கள்
2. அவர்கள் மனித உருவில் தெய்வங்களை வழிபட்டனர்.
3. அவர்கள் தங்கள் தெய்வங்களைக் கோவில்களில் வைத்தார்கள்.

(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 மட்டும் **(இ) 1 மற்றும் 2 மட்டும்** (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

23. கடல் செல்கலன் கட்டும் திட்டத்தை முன்னெடுத்த முகலாய மன்னர் பெயர்

(அ) பாபர் (ஆ) அக்பர் **(இ) ஷாஜஹான்** (ஈ) ஔரங்கசீப்

24. "கண்டசாரா" என்றழைக்கப்படும் ஒழுங்கான ராணுவத்துறையினை கொண்டிருந்த அரசர்கள்

**(அ) விஜயநகர ஆட்சியாளர்கள்** (ஆ) பாமினி சுல்தான்கள்

(இ) மராத்தியர்கள் (ஈ) மொகலாயர்கள்

25. ஷாஜஹான் டெல்லியில் ஜீம்மா மசூதியினை கட்டப் பயன்படுத்திய அடிப்படை கட்டுமானப் பொருள் எது?

(அ) மஞ்சள் மணற்கல் **(ஆ) சிவப்பு மணற்கல்**

(இ) கருப்பு மணற்கல் (ஈ) உலோகம்

26. பின்வரும் கூற்றுகளில் எது சரியான கூற்று/கூற்றுகள் என்பதை எடுத்து எழுதுக?
1. அமீர் குஸ்ரு, அபுல் பாஸல், ஜியாவுதீன் பரணி ஆகியோர், இடைக்கால பாரசீக வரலாற்று ஆசிரியர்கள்
2. துக்ளக் நாமா, அக்பர் நாமா, தாரிக் ஃபிரோஷாகி ஆகிய நூல்கள் இவர்களால் முறையே எழுதப்பட்டவை ஆகும்.

(அ) 1 மற்றும் 2 தவறு (ஆ) 1 சரி 2 தவறு

**(இ) 1 மற்றும் 2 சரி** (ஈ) 1 தவறு 2 சரி

27. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ. விஸாகதத்தர் | 1. நீதி சாஸ்திரம் |
| ஆ. காமாந்தகர் | 2. நியாய பாஷ்யம் |
| இ. அஸங்கர் | 3. முத்ர ராக்ஷஷம் |
| ஈ. வாஸ்த்யாயனர் | 4. பூமி சாஸ்திரம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 2 | 1 | 3 |
| **ஆ.** | **3** | **1** | **4** | **2** |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| ஈ. | 1 | 3 | 2 | 4 |

28. தேவி சந்திர குப்தம் யாருடைய வாழ்க்கை வரலாற்றை பற்றி கூறுகிறது?

(அ) முதலாம் சந்திர குப்தர் I **(ஆ) இரண்டாம் சந்திர குப்தர் II**

(இ) சமுத்திர குப்தர் (ஈ) ஸ்கந்த குப்தர்

29. கீழ்க்காண்பவற்றில் எது குடியரசுத் தலைவர் ஆவதற்கான தகுதி கிடையாது?

(அ) 35 வயது நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்

**(ஆ) மாநிலங்களவை உறுப்பினர் ஆவதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.**

(இ) இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்

(ஈ) ஆதாயம் தரும் பதவி ஏதும் வகிக்கக் கூடாது

winmeen.com

30. எவ்வகையான மக்களாட்சி முறையைத் தகவல் அறியும் உரிமை வளர்த்தெடுக்கக் கூடும்?
(அ) நேரடியான மக்களாட்சி (ஆ) பிரதிநிதித்துவ மக்களாட்சி
(இ) நடைமுறைசார்ந்த மக்களாட்சி **(ஈ) பங்கேற்பு மக்களாட்சி**

31. மாநிலங்களின் மறு சீர் அமைப்பு ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு
**(அ) 1953** (ஆ) 1960 (இ) 1950 (ஈ) 1952

32. பின்வருவனவற்றுள் எது அம்பேத்காரால் அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என விவரிக்கப்பட்டது?
(அ) மதச்சுதந்திரத்திற்கான உரிமை (ஆ) சொத்துரிமை
(இ) சமத்துவத்திற்கான உரிமை **(ஈ) அரசியலமைப்புத் தீர்வுகளுக்கான உரிமை**

33. குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் தொடர்பான வர்மா குழுவின் அறிக்கை ஒப்படைக்கப்பட்ட ஆண்டு
(அ) 1997 (ஆ) 1998 **(இ) 1999** (ஈ) 2000

34. தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பற்றி பின்வருவனவற்றுள் எது சரியானது?
**(அ) தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு அதிகாரிகளும், பொது தகவல் அலுவலரை நியமிக்க வேண்டும்**
(ஆ) தகவல் அறியும் உரிமை சட்டம் இந்திய பாராளு மன்றத்தில் 2004இல் இயற்றப்பட்டது?
(இ) பொது தகவல் அலுவலர் கோரிக்கைகளுக்கான பதிலை 35 நாட்களுக்குள் தரவேண்டும்
(ஈ) கோரிக்கைகளை தாக்கல் செய்ய குறைந்த பட்சக் கட்டணம் ரூ.25 ஆகும்.

35. இந்திய குடியரசுத்தலைவரால் ராஜ்யசபையில் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை -------- ஆகும்.
(அ) 2 (ஆ) 10 **(இ) 12** (ஈ) 15

36. கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க:
1. மாநில மனித உரிமை கழகத்தின் செயல்பாடுகள் அடிப்படையில் ஆலோசனை அமைப்பாக செயல்படுகிறது.
2. மாநில மனித உரிமை கழகத்தின் ஆலோசனையானது மாநில அரசாங்கத்துடன் பிணைந்திருக்கக் கூடியது.
மேற்கண்ட கூற்றுகளில் எதுஎவை சரியானவை?
**(அ) 1 சரி** (ஆ) 2 சரி (இ) 1 மற்றும் 2 சரி (ஈ) எதுவுமில்லை

37. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலையின்மைக்கு இடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவது
(அ) கினி கெழு **(ஆ) ஒகுன்ஸ் விதி**
(இ) லாரன்ஸ் வளைகோடு (ஈ) பிலிப்ஸ் வளைகோடு

38. இந்திய அரசின் வருமான வரி கொள்கையானது இதன் அடிப்படையில் அமைந்துள்ளது.
1. செலுத்தும் திறன்
2. வரி தாங்கும் திறன்
3. சமத்துவ விதி
குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க:
(அ) 1 மற்றும் 2 சரியானவை (ஆ) 2 மற்றும் 3 சரியானவை

winmeen.com

**(இ) 1 மற்றும் சரியானது** (ஈ) 3 மற்றும் சரியானது

39. இந்தியாவில் ஜிஎஸ்டி -------- முதல் நடைமுறைக்கு வந்தது
(அ) 1 ஜீலை 2014 (ஆ) 1 ஜீலை 2016 **(இ) 1 ஜீலை 2017** (ஈ) 1 ஜீலை 2015

40. 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் தேசிய சராசரி எழுத்தறிவு விகிதம்
**(அ) 74.04%** (ஆ) 74.02% (இ) 74.08% (ஈ) 74.10%

41. கிராமப்புறக் கடனுக்கான உச்ச வங்கி
**(அ) நபார்டு** (ஆ) ஆர்பிஐ (இ) ஐடிபிஐ (ஈ) ஆர்ஆர்பி

42. இந்தியாவில் நில சீர்திருத்தங்களுக்கான அவசியம் என்ன?
1. விவசாய நிலம் பிரிக்கப்பட்டது
2. ஒரு நபருக்கான விதைக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு அதிகரித்து வருகிறது
3. உற்பத்தி திறன் குறைந்து வருகிறது
(அ) 1 மற்றும் சரி; ஆனால் 2 மற்றும் 3 தவறானவை
**(ஆ) 1 மற்றும் 3 சரி; ஆனால் 2 மட்டும் தவறானது**
(இ) 1 மட்டும் தவறானது; ஆனால் 2 மற்றும் 3 சரி
(ஈ) அனைத்தும் சரி

43. 10, 000 ஹெக்டேருக்கு அதிகமான விளை நிலங்களுக்கு (CCA) பாசன வசதி வழங்கும் திட்டத்தினை ------ எனலாம்
**(அ) பெரிய நீர்ப்பாசனத் திட்டம்** (ஆ) நடுத்தர நீர்ப்பாசனத் திட்டம்
(இ) சிறிய நீர்ப்பாசனத் திட்டம் (ஈ) குறு நீர்ப்பாசனத் திட்டம்

44. காமராஜரைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?
1. காமராஜரின் அரசியல் குரு சத்தியமூர்த்தி ஆவார்
2. 1937 இல் சேலத்திலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்
3. குந்தா ஆறு திட்டம் இவர் முயற்சியால் உருவாக்கப்பட்டது
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 மட்டும் **(இ) 1 மற்றும் 3 மட்டும்** (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

45. கூற்று (A) : "வந்தே மாதரம்" என்பது போராட்டத்திற்கான முழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
விளக்கம் (R): வங்காளப் பிரிவினருக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது
(அ) (A) சரி ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) சரி, (R) என்பது (A) வின் சரியான விளக்கமாகும்**
(இ) (A) தவறானது, (R) சரியானது
(ஈ) (A) மற்றும் (R) சரியானது ஆனால் (R), (A)வின் சரியான விளக்கமல்ல

46. பின்வரும் வாக்கியம் (வாக்கியங்களில்) எவை சரியானவை?
1. மகாகவி பாரதியார் நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி மற்றும் எல்லா காலத்திலும் சிறந்த தமிழ் இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.
2. பாரம்பரிய மற்றும் சமகால கூறுகளை இணைத்த ஒரு வலிமையான நாடகத்தின் முன்னோடி பாரதியார் ஆவார்.
**(அ) 1 மட்டும்** (ஆ) 2 மட்டும் (இ) 1 மற்றும் 2 ஆகியன (ஈ) மேற்கண்ட எவையுமில்லை

47. இராஜபாளையத்தில் காதி இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் இவர்

**(அ) ஐ.பி.அரங்கசாமி ராஜா** (ஆ) இரட்டைமலை சீனிவாசன்
(இ) டி.எம்.நாயர் (ஈ) பி.வரதராஜிலு

48. தவறான பொருத்தங்களைத் தேர்வு செய்ய:

| | | |
|---|---|---|
| 1. அஷ்ட்டபிரதான் | – | எட்டு அமைச்சர் குழு |
| 2. சர்தேஷ்முகி | – | பிரதேச வரி |
| 3. சவுத் | – | சுங்கவரி |
| 4. அமத்தியா | – | வெளிநாட்டுத்துறை அமைச்சர் |

(அ) 1 மற்றும் 2 சரி **(ஆ) 3 மற்றும் 4 சரி** (இ) 2 மற்றும் 3 சரி (ஈ) 1 மற்றும் 4 சரி

49. தென்னாப்பிரிக்காவில் எந்த இரயில் நிலையத்தில் காந்தி இரயிலில் இருந்து வெளியேற்றப்பட்டார்?
**(அ) பீட்டர்மரிட்ஸ்பர்க்** (ஆ) ஜோகன்னஸ்பர்க் (இ) குரூன்ஸ்டாட் (ஈ) ஹாட்ஃபீல்ட்

50. 1857ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு முந்தைய மற்றும் மிகவும் பிரபலமான கலகங்களில் இதுவும் ஒன்று?
(அ) பூர்வீக காலாட்படை கலகம் (1824) **(ஆ) வேலூர் இந்திய சிப்பாய்கள் கலகம் (1806)**
(இ) ஷோலாப்பூர் கலகம் (1838) (ஈ) அசாம் சிப்பாய் கலகம் (1824)

51. கலிங்கத்துப் பரணியில் குறிப்பிடப்பட்டுள்ள "யோகா" என்ற சொல்லின் பொருள் விளக்கம்
(அ) உடற்பயிற்சி செய்தல் (ஆ) மந்திரங்கள் ஓதுதல்
(இ) வழிபடுதல் **(ஈ) மனதை ஒருமுகப்படுத்துதல்**

52. தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்களின் ஆரம்பகால செப்புத்தகடு கல்வெட்டுகள்
(அ) திருவாலங்காடு செப்புப் பட்டயம்
(ஆ) வேள்விக்கடீ செப்புப் பட்டயம்
(இ) வேலூர்பாளையம் பட்டயம்
(ஈ) சின்னமனூர் செப்புப் பட்டயம்
**(அ) அ மட்டும்** (ஆ) ஆ மற்றும் இ மட்டும
(இ) அ மற்றும் இ மட்டும் (ஈ) இ மற்றும் ஈ மட்டும்

53. கீழே கொடுக்கப்பட்டவற்றுள் சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்க:

| | | |
|---|---|---|
| 1. இந்து விதவை மறுதிருமணச் சட்டம் | – | 1856 |
| 2. வங்க சதி ஒழுங்குமுறை | – | 1829 |
| 3. மெட்ராஸ் பிராமணர் அல்லாதோர் சங்கம் | – | 1919 |
| 4. இந்து சமய அறநிலையச் சட்டம் | – | 1821 |

(அ) 1 மற்றும் 3 மட்டும் சரி **(ஆ) 1 மற்றும் 2 மட்டும் சரி**
(இ) 2 மற்றும் 3 மட்டும் சரி (ஈ) 3 மற்றும் 4 மட்டும் சரி

54. காங்கிரஸ் கட்சியின் வானொலியில் பணியாற்றிய திடுக்கிடும் செய்தியை வாசிப்பதில் தேர்ச்சிப்பெற்ற மற்றும் நேர்த்தியான வார்த்தை உச்சரிப்பை கொண்ட பெண்மணி
(அ) கோகிலா பென் (ஆ) கமலா பென் **(இ) உஷா மேத்தா** (ஈ) அனிதா பென்

55. நாட்டுப்பாடல் சாயலில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார் யார்?
(அ) ஆண்டாள் (ஆ) திருப்பாணாழ்வார்
(இ) திருமழிசையாழ்வார் **(ஈ) திருமங்கையாழ்வார்**

56. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான இணையைத் தேர்வு செய்க:

(அ) சிட்டி லைட்ஸ் – காவியப்படம்
(ஆ) தி கிரேட் டிக்டேட்டர் – கேலிச் சித்திர நடிகர்
(இ) சார்லி சாப்ளின் – சாதனைப் படம்
**(ஈ) மாடர்ன் டைம்ஸ் – ஆராய்ச்சி படம்**

57. 'மனுமுறை கண்ட வாசகம்" என்ற நூலை எழுதியவர் யார்?
(அ) உ.வே.சாமிநாதர் **(ஆ) இராமலிங்க அடிகள்** (இ) தாமோதரர் (ஈ) வைகுண்ட சாமிகள்

58. ஆதிக்க இந்தியாவின் முதல் மற்றும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒரே கவர்னர் ஜெனரல் யார்?
**(அ) சி.இராசகோபாலாச்சாரியார்** (ஆ) ஆர்.கே.சண்முகம் செட்டி
(இ) எம்.பக்தவத்சலம் (ஈ) லார்ட் மவுண்ட் பேட்டன்

59. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் ஒரு
(அ) புத்த துறவி **(ஆ) சமணத்துறவி** (இ) இந்து துறவி (ஈ) கிருஸ்துவர்

60. வரிசை I ல் உள்ளதை II ம் வரிசையுடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| வரிசை I | வரிசை II |
|---|---|
| அ. குறிஞ்சி | 1. இந்திரன் |
| ஆ. முல்லை | 2. முருகன் |
| இ. மருதம் | 3. திருமால் |
| ஈ. நெய்தல் | 4. வருணன் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **3** | **1** | **4** |
| ஆ. | 3 | 2 | 1 | 4 |
| இ. | 2 | 1 | 3 | 4 |
| ஈ. | 3 | 1 | 2 | 4 |

61. நீதிக்கட்சியைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது என்பதை தேர்ந்நடுக்கவும்.
1. பிராமணர் அல்லாதவர்களின் நலன்களைக் காக்க ஆகஸ்ட் 1917இல் தென்னிந்திய தாராளவாதக் கூட்டமைப்பு என்றகட்சியை ஏற்பாடு செய்தார்.
2. தென்னிந்திய தாராளவாத கூட்டமைப்பு நீதிக்கட்சி என்று அறியப்படுகிறது.
3. நீதிக்கட்சி திராவிட இயக்கத்திற்கு ஒரு முன்னோடியாக கருதப்படுகிறது
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 மட்டும் **(இ) 1 மற்றும் 2 மட்டும்** (ஈ) 1, 2 மற்றும் 3 சரி

62. "காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்" எனப் புகழப்படுபவர் யார்?
**(அ) பாரதியார்** (ஆ) பாரதிதாசன் (இ) சுரதா (ஈ) வாணிதாசன்

63. தமிழில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பு எது?
(அ) காகிதப் பூக்கள் **(ஆ) புதுக்குரல்கள்**
(இ) காற்றிலே மிதந்த கவிதை (ஈ) மெர்க்குரிப்பூக்கள்

64. "எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய நிலனே"
என்று பாடிய புலவர் யார்?
(அ) பரணர் (ஆ) கபிலர் **(இ) ஔவையார்** (ஈ) வெள்ளிவீதியார்

65. கடையேழு வள்ளல்களில் நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்கு அளித்தவர் யார்?
(அ) காரி (ஆ) ஓரி **(இ) ஆய் அண்டிரன்** (ஈ) நல்லி

66. பின்வருவனவற்றுள் எது அரசின் சமூக நலத் திட்டங்களின் முன்னுரிமையில் இல்லாதது?
(அ) பெண்கள் பாதுகாப்ப (ஆ) வயது வந்தோர் பாதுகாப்பு
(இ) குழந்தைகள் பாதுகாப்பு **(ஈ) சுற்றுச் சூழல் பாதுகாப்பு**

67. மெட்ராஸ் மாநிலம் எப்போது தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது மற்றும் அந்த முதலமைச்சர் யார்?
(அ) 1965 சுப்பராயலூ ரெட்டியார் (ஆ) 1967 காமராஜர்
**(இ) 1969 அண்ணாதுரை** (ஈ) 1972 அண்ணாதுரை

68. 2011–ஆம் ஆண்டின் மக்களதொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் எந்த மாவட்டம் மிகக் குறைவான குழந்தைப் பாலின விகிதத்தைக் கொண்டுள்ளது?
**(அ) அரியலூர்** (ஆ) கடலூர் (இ) மதுரை (ஈ) தேனி

69. எந்த இந்திய நகரம் "ஆசியாவின் டெட்ராய்டு" என அழைக்கப்படுகிறது?
(அ) டெல்லி (ஆ) மும்பை (இ) பெங்களூர் **(ஈ) சென்னை**

70. கிராமங்கள் மற்றும் நகரங்ளின் வணிகம் சாராத ஆற்றல் வளம் --------- இல்லை
(அ) மர எரிபொருளில் (ஆ) விவசாய கழிவுகளில்
**(இ) நீர் ஆற்றலில்** (ஈ) விலங்கு சாணத்தில்

71. 2011 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் அதிக சதவிகித நகர்புற மக்கள் தொகையைக் கொண்ட மாநிலம் எது?
(அ) கேரளா **(ஆ) தமிழ்நாடு** (இ) குஜராத் (ஈ) மகாராஷ்ட்ரா

72. காய கல்ப் விருது எந்தத் துறையுடன் தொடர்புடையது?
(அ) கல்வி **(ஆ) பொதுசுகாதாரம்** (இ) விளையாட்டு (ஈ) யோகா

73. ------ என்ற கருத்து நீண்ட வாழும் காலம், அறிவு மற்றும் மனித வாழ்க்கையின் கௌரவமான வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் உள்ள இழப்பில் கவனம் செலுத்துகிறது
(அ) பாலின சமத்துவமின்மை குறியீடு **(ஆ) மனித வறுமை குறியீடு**
(இ) பாலின வளர்ச்சி குறியீடு (ஈ) மனதவள குறியீடு

74. கூற்று (A): தமிழ்நாட்டில் நீர் நிலைகள் நிரம்ப முழுமையாக மழையை சார்ந்துள்ளது.
காரணம் (R): தமிழ்நாட்டில் பருவ கால மழை பெய்யாமையால் தண்ணீர் பஞ்சம் மற்றும் கடுமையான வறட்சி நிலவுகின்றது.
(அ) (A) சரி ஆனால் (R) தவறு
**(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R) என்பது (A) க்குசரியான விளக்கம்**
(இ) (A) தவறு ஆனால் (R) சரி
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) மற்றும் என்பது (A)க்குசரியான விளக்கமல்ல.

75. தமிழ்நாட்டில், எண்ணிலக்க முடுக்கி திட்டத்தின் நோக்கம்
(அ) புதிய கல்வி நிறுவனங்களை தொடங்குவது
**(ஆ) புதிய தொழில்சாலைகளை தொடங்குவது**

(இ) அதிக வங்கி கிளையை திறப்பது
(ஈ) குற்றங்களை போக்குதல்

76. ஒரு மிதிவண்டி உற்பத்தி செய்யும் நிறுவனம் 35 மிதிவண்டிகளை ஐந்து நாட்களில் உற்பத்தி செய்கிறது. எனில் அந்நிறுவனம் 21 நாட்களில் உற்பத்தி செய்யும் மிதிவண்டிகளின் எண்ணிக்கை

(அ) 170 (ஆ) 150 **(இ) 147** (ஈ) 100

77. ரூ.350 என்ற அசலானது 6 ஆண்டுகளில் கூடுதல் ரூ.455 ஆக கிடைக்கப்பெற்றால் அதன் வட்டிவீதம் காண்க:

(அ) 15% (ஆ) 25% (இ) 10% **(ஈ) 5%**

78. 3, 8, 15, 24, 34, 48, 63 என்ற தொடரில் தவறான எண்ணைக் காண்.

(அ) 15 (ஆ) 24 **(இ) 34** (ஈ) 48

79. 1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34, -------- என்ற தொடரில் அடுத்த எண்ணைக் காண்க?

(அ) 50 **(ஆ) 55** (இ) 60 (ஈ) 65

80. 1+2+3+... +n = k எனில் $1^3+2^3+3^3+\ldots+n^3$ என்பது

**(அ) $k^2$** (ஆ) $k^3$ (இ) k(k+1)/2 (ஈ) $(k+1)^3$

81. 4 4 5 4 5 3 4 5 3 1 4 5 3 1 2 4 5 4 5 3 4 5 3 பின்வரும் தொடர்வரிசை குறிப்பின்படி 1 என்பது ஓடு, 2 என்பது நில., 3 என்பது போ, 4 என்பது உட்காரு, 5 என்பது பொறு, தொடர்வரிசை தொடரும் எனில் குறிப்பின் படி எது வரும்?

(அ) பொறு (ஆ) உட்காரு **(இ) ஓடு** (ஈ) நில்

82. MACHINE என்பது 19-7-9-14-15-20-11 எனக் குறிக்கப்பட்டால் DANGER என்பது எவ்வாறு குறிக்கப்படும்?

(அ) 11-7-20-16-11-24 (ஆ) 13-7-20-9-11-25
**(இ) 10-7-20-13-11-24** (ஈ) 11-7-20-10-11-25

83. குமரனின் தற்போதைய வயதின் இருமடங்கோடு ஒன்றைக் கூட்டினால் கிடைப்பது, குமரனின் இரண்டாண்டுகளுக்கு முந்தைய வயதையும் அவரின் 4 ஆண்டுகளுக்கும் பிந்தைய வயதையும் பெருக்கக் கிடைப்பதற்குச் சமம் எனில், அவரின் தற்போதைய வயதைக் காண்க:

(அ) 6 (ஆ) 5 (இ) 4 **(ஈ) 3**

84. சிவகுமாரின் வயது அவரது மகள் பிரீத்தியின் வயதைப் போல 7 மடங்கு ஆகும். 5 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் வயது மகளின் வயதைப் போல 4 மடங்கு இருக்கும். அவர்களின் தற்போதைய வயது என்ன?

**(அ) 5, 35** (ஆ) 6, 36 (இ) 7, 42 (ஈ) 4, 32

85. 8 விவசாயிகள் 18 நாள்களில் நிலத்தை உழுது முடிக்கின்றனர் எனில், அதே நிலத்தை 12 விவசாயிகள் எத்தனை நாள்களில் உழுது முடிப்பர்.

(அ) 22 நாட்கள் **(ஆ) 12 நாட்கள்** (இ) 10 நாட்கள் (ஈ) 15 நாட்கள்

86. 2 ஆண்கள் மற்றும் 3 சிறுவர்கள் சேர்ந்து ஒரு வேலையை 10 நாட்களில் செய்து முடிப்பர். அதே வேலையை 3 ஆண்கள் மற்றும் 2 சிறுவர்கள் சேர்ந்து 8 நாட்களில் செய்து முடிப்பர் எனில் 2 ஆண்கள் மற்றும் 1 சிறுவர் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிக்க முடியும்?

**(அ) 12 1/2 நாட்கள்** (ஆ) 12 நாட்கள் (இ) 13 1/2 நாட்கள் (ஈ) 13 நாட்கள்

87. ஒரு கூடத்தின் அளவு 10 மீ X 9 மீ X 8 மீ என்றவாறு உள்ளது. அக்கூடத்தின் சுவர்கள் மற்றும் மேற்கூரைக்கு வெள்ளையடிக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ.8.50 வீதம் ஆகும். மொத்தச் செலவைக் காண்க:

(அ) ரூ.2, 250 (ஆ) ரூ.3, 320 **(இ) ரூ.3, 349** (ஈ) ரூ.4, 449

88. ஒரு கனச்சதுரத்தின் மொத்தப்பரப்பு 726 செமீ$^2$ எனில் அதன் கனஅளவு

(அ) 627 செமீ$^3$ (ஆ) 276 செமீ$^3$ **(இ) 1331 செமீ$^3$** (ஈ) 3311 செமீ$^3$

89. ரூ.3, 000 க்கு 10% ஆண்டு வட்டி வீதத்தில் 3 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்பட்டால் கிடைக்கும் கூட்டு வட்டி

(அ) ரூ.900 (ஆ) ரூ.933 (இ) ரூ.963 **(ஈ) ரூ.993**

90. அரையாண்டிற்கு ஒரு முறை வட்டி கணக்கிடப்பட்டால் ரூ.1, 200 க்கு, ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டி வீதம் ஓராண்டுக்கு, தனிவட்டிக்கும் கூட்டுவட்டிக்கும் உள்ள வித்தியாசம்

(அ) ரூ.2.50 **(ஆ) ரூ.3.00** (இ) ரூ.3.75 (ஈ) ரூ.4.00

91. பின்வரும் வட்டி வீதத்தில் எது ரூ.2, 000 அசலுக்கு ஓராண்டுக்கு ரூ.200 ஐ தனி வட்டியாகக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்?

**(அ) 10%** (ஆ) 20% (இ) 5% (ஈ) 15%

92. ஒரு தொகை ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் 2 ஆண்டுகளில் ரூ.6, 200 எனவும் 3 ஆண்டுகளில் ரூ.6, 800 எனவும் உயர்கிறது எனில் அந்த தொகையையும், வட்டி வீதத்தையும் காண்க:

(அ) ரூ, 4, 000, i=15% **(ஆ) ரூ.5, 000, i=12%**

(இ) ரூ.6, 000, i=10% (ஈ) ரூ.3, 000, i=20%

93. 9:121 ன் தலைகீழியின் விகிதம்

(அ) 3:11 (ஆ) 6:22 (இ) 11:3 **(ஈ) 121:9**

94. விட்டம் மற்றும் உயரம் ஒரே மாதிரியான உருளை கூம்பு மற்றும் கோளத்தின் கன அளவுகளின் விகிதம்

(அ) 1:2:3 (ஆ) 2:1:3 (இ) 1:3:2 **(ஈ) 3:1:2**

95. இரு எண்களின் பெருக்கற்பலன் 432 மற்றும் அவைகளின் மீ.சி.ம. மற்றும் மீ.பொ.வ. முறையே 72 மற்றும் 6 ஆகும். அவ்வெண்களில் ஒரு எண் 24 எனில் மற்றொரு எண்

(அ) 16 **(ஆ) 18** (இ) 22 (ஈ) 36

96. இரு எண்களின் மீ.பொ.ம ஆனது, அந்த இரண்டு எண்களின் மீ.பொ.வ. வின் 6 மடங்காகும். மீ.பொ.வ.12 மற்றும் ஒரு எண் 36 எனில் மற்றொரு எண்.

(அ) 72 (ஆ) 36 **(இ) 24** (ஈ) 12

97. 62, 78, 109 ஐ வகுத்து முறையே 2, 3 மற்றும் 4 மீதிகளாகக் கொடுக்கும் மீப்பெரு பொதுக்காரணி காண்க:

**(அ) 15** (ஆ) 16 (இ) 12 (ஈ) 13

98. 18 மற்றும் 30 ஆகிய எண்களின் மீ.பெ.க மற்றும் மீ.சி.ம வின் விகிதம் காண்க:
(அ) 1:18 (ஆ) 1:30 (இ) 18:30 **(ஈ) 1:15**

99. 850 மீட்டரில் 225 மீட்டர் என்பது எத்தனை சதவீதம்?
(அ) 26.49% (ஆ) 26.48% **(இ) 26.47%** (ஈ) 26.46%

100. ஒரு தெருவில் வசிப்பவர்களில் 65% பேர் தமிழும், 52% பேர் இந்தியும் 40% பேர் மலையாளமும் பேசுகிறார்ள். 32% பேர் தமிழும் இந்தியும் 30% பேர் தமிழும் மலையாளமும், 25% பேர் இந்தியும், மலையாளமும், 10% இம்மூன்று மொழிகளைத் தவிர மற்று மொழிகளையும் பேசுகிறார்கள் எனில் மூன்று மொழிகளையும் பேசத் தெரிந்தவர்கள் எத்தனை சதவீதம்?
(அ) 10% (ஆ) 80% (இ) 90% **(ஈ) 20%**

winmeen.com